IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 156 /2012
Deposition of witness for PW1

Name : நாகலட்சுமி

Husband's Name : தெய்வநாயகம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 27 day of February, 2020.

( திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு கு.வி.தொடர்ச்சி

ஏற்கனவே நான் நீதிமன்றத்தில் சாட்சி சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது. தாவா சொத்து எனது தாத்தாவினுடைய மூதாதையர் சொத்து. அதை காண்பிக்க எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா கோவிந்தராஜ் கிரைம பெற்ற தனிச்சொத்து என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு என் தகப்பனார் மட்டும் ஒரே வாரிசு, 3 பெண்மக்கள் இருந்தனர் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 5 ஆண்மக்களும், 4 பெண்மக்களும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரர்கள் பெயர் தங்கராஜ், துணைப்பிரகாசம், வேணுமூர்த்தி, நாகேந்திரன், விஜயகுமார் ஆகிய 5 ஆண்மக்கள். 17.3.1968-ல் எனது தாத்தா கோவிந்தராஜ்கிராமிணி அவரது சொத்துக்களை பொறுத்தும் தாவா சொத்தையும் சேர்த்தும் எனது சகோதாரர்கள் 5 பெயர்களுக்கும் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது பூர்வீக சொத்தாகும். அந்த உயிலில் எனது தாத்தா கோவிந்தராஜ்கிராமிணி சுயார்ஜ்ஜிதமாக கிரையம பெற்ற சொத்து என்று குறிப்பிட்டு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு அதுப்பற்றி ஞாபகம் இல்லை. எனது கணவர் கிரையம் பெற்ற தாவா சொத்தில் உள்ள ஒரு பகுதியை எனது சகோதரரிடமிருந்து, பிரதிவாதியும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், சுவாதீன மீட்பும் கேட்டும், செலவுதொகை கேட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர் தங்கராஜியிடமிருந்து தான்

சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தான் எனக்கு சுவாதீனம் கொடுக்கவேண்டும். 2012-ம் ஆண்டு எனது சகோதரர் தங்கராஜ் உயிருடன் இருந்தார். நானும், எனது சகோதரர்களும் 12 பிளாட் போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. 1987ம் ஆண்டு எனது கணவர் பிளாட்போட்டார். நாங்கள் அதில் 1 ம் எண். பிளாட்டும், 3ம் எண் பிளாட்டும் விற்பனை செய்தோம். நாங்கள் பிளாட்போட்டு விற்பனை செய்துவிட்டதால் அந்த சொத்தை பொறுத்து உரிமைகோர முடியாது என்றும், எனவே நான்கோரியுள்ள உரிமை விளம்புகை எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் பிளாட் போடுவதற்கு முன்பு எனது சகோதரர்கள் துணைபிரகாசம் 2 பிளாட்டுகள் விற்பனை செயதுதள்ளார்கள் என்றால் சரிதான். போலியான ஆவணங்களை தயார் செய்து விற்பனை செய்துள்ளார்கள். எனக்கு சொந்தமான பிளாட்களை விற்பனை செய்துவிட்டார்கள் என்று புகார் எதுவும் செய்யவில்லை. அதை கிரையம் பெற்றவர்களுக்கு எதிராக நான் வழக்கு எதுவும் தாக்கல செய்யவில்லைஎன்றால் சரிதான். காவல்துறை கண்காணிப்பாளரிடம் மேற்படி 5 சகோதரர்கள் மீதும் நிலஅபகரிப்பு செய்ததாக புகார் செய்தேன். காவல்துறையினா் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. எனது கணவர் இறந்த பிறகு தான் புகார் கொடுத்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு புகார் கொடுத்தேனா என்றால்கொடுத்தேன். காவல் துறையினா் நாங்கள் கொடுத்த ஆவணத்தையும், அவர்கள் கொடுத்த ஆவணத்தையும் ஆய்வு செய்தார்கள். நான் கொடுத்த நிலஅபகரிப்பு காவல் அலுவலா் எனது கணவரையும், என்னையும், எனது சகோதரர்களையும் எங்களிடம் உள்ள ஆவணத்தையும் ஆய்வு செய்து தாங்கள் தங்களது சகோதாரா் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தால் வா.சா.ஆ1 கிரைய ஆவணம் செல்லத்தகக்கத்தல்ல என ஆகிவிடும் என்ற காரணத்திற்காக என்னுடைய சகோதரர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் விற்பனை செய்த தரப்பினர்களை வழக்கில் சேர்க்கப்படவில்லை எஸ்.பி. ஆபீசில் அவர் மீதும் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் அவர்களுக்கெதிராக வழக்கு

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தில் வா.சா.ஆ1-ல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று அளவீடுகள் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ1-ல் சொத்து விவரத்தில் கி/மே எவ்வளவு அளவு, வ/தெ எவ்வளவு அளவு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மீண்டும் முதலில் இருந்து வா.சா.1 நாகலட்சுமியை குறுக்கு விசாரணை செய்ய கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கிறார். இவ்வழக்கில் கூடுதல் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார். அதை பொறுத்து மட்டும் கேள்வி கேட்காமல் மீண்டும், மீண்டும் உரிமைபற்றியும் அவர் செய்த கிரையங்கள் பற்றியும் கேள்விகள் கேட்பதால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரை கூடுதல் நிரூபணவாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளவைகள் பற்றி மட்டும் கேள்விகள் கேட்கவேண்டும்.)

(பிரதிவாதி தரப்பு கற்றிந்த வழக்கறிஞர் ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகள் கேட்க எனக்கு உரிமை உள்ளது என்று கூறுகிறார். இந்த நீதிமன்றத்தில் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்ட சாட்சியத்தை மட்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கின்றது.)

வா.சா.ஆ18 கேவியட் ஆவணம் எனக்கு 2003ம் ஆண்டிலேயே பிரதிவாதி கேவியட் அனுப்பினார் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியவில்லை எனது கணவர் அதை பார்த்துவந்தார். முதன்முதலில் என்மீது வழக்கு தாக்கல் செய்தார். எனது சகோதரர்களை தரப்பினராக பிரதிவாதி கேவியட் போட்டிருந்தார். தங்கராஜை அந்த இந்த வழக்கில் 2003-லேயே தகவல் தெரிந்தும் 10 ஆண்டுக்கு பின்னர் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு பிரதிவாதிகளை அழைத்து அவர்களிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் எனது சகோதரர் தங்கராஜ்யிடம் தான் கேட்கவேண்டும் என்றும், இந்த பிரதிவாதியிடம் விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தங்கராஜிக்கு சொந்தமான இடத்தை தான் பிரதிவாதிக்கு கிரையம் செய்தார் என்றால் சரியல்ல.

என்னுடைய சொத்துக்குரிய வருவாய்த்துறை வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பிரதிவாதியை இவ்வழக்கில் நான்தவறுதலாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய சொத்து பிரதிவாதிக்குத்தான் சேறும் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல˙செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது தவறாக வழக்கிட்டுள்ளதால் பிரதிவாதிக்கு ஏற்பட்ட இவ்வழக்கு செலவுத்தொகையை நான் செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.